Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 25 2025

செவ்வாய்க்கிழமை 25, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 166 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## வெப்பநிலை எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளில் திங்கட்கிழமை(24) நிலவிய கடுமையான வெப்பநிலை இன்று செவ்வாய்க்கிழமை (25) அன்றும் தொடரும் என வளிமண்டல வியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை(25) தினமும் நாட்டின் பல இடங்களில் மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலையானது எச்சரிக்கை மட்டத்துக்கு உயரும் என்று அதன் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வடமேல், மேல், சப்ரகமுவ, ஆகிய மாகாணங்களிலும், காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் கடுமையான வெப்பநிலை நிலவும்.

அத்துடன், இன்று முதல் நாட்டின் சில மாகாணங்களில் இரவு வேளையில் மழையுடனான வானிலை நிலவும் என்றும் வளி மண்டலவி யல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# “படைவிட்டோடிகளை கைது செய்க”

நாட்டின் பாதுகாப்புப் படைகளில் இருந்து தப்பியோடியவர்களை உடனடியாகக் கைது செய்யப் பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துயகோந்தா கட்டளை பிறப்பித்துள்ளார்.

சமீபத்திய வாரங்களில் பதிவாகியுள்ள துப்பாக்கிச் சூடு சம்பவங்களின் கவலைக்குரிய அதிகரிப்பின் பிரதிபலிப்பாக இந்த கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், திங்கட்கிழமை (24) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புப் படை வீரர்கள் தங்கள் பதவிகளைக் கைவிட்டதன் பின்னர், வன்முறை சம்பங்கள் அதிகரித்தள்ளமையால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்னாள் இராணுவ வீரர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவது குறித்த பதிலளித்துள்ள அவர், சமீபத்திய குற்றங்களுடன் தொடர்புடைய பல நபர்கள் ஆயுதப் பயிற்சி பெற்ற பிறகு அதிகாரப்பூர்வமற்ற முறையில் இராணுவ சேவையிலிருந்து வெளியேறி விட்டனர் அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு செயலாளர் துயகோந்தா தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் உதவியுடன் அதிகாரிகள் இந்த நபர்களைக் கைது செய்யப் பணியாற்றி வருவதாக அவர் உறுதியளித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற கும்பல்களுக்கு எதிராகச் சட்டத்தைக் கண்டிப்பாக அமல்படுத்துவதில் அமைச்சின் உறுதிப்பாட்டையும் துயகோந்தா வலியுறுத்தியுள்ளார்.

குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கு இந்தக் கும்பல்களுக்கான பல தசாப்த கால அரசியல் பாதுகாப்பு காரணமாகக் கூறியுள்ளார். ஆனால், தற்போதைய நிர்வாகத்தின் கீழ், அத்தகைய குழுக்கள் இனி ஆதரவைப் பெறாது என்று உறுதியளித்தார். இந்த நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கு விரைவான மற்றும் கடுமையான சட்ட அமலாக்கத்திற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை அவர் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

தனிப்பட்ட பாதுகாப்பிற்காக சட்டவிரோதமாக வழங்கப்பட்ட துப்பாக்கிகளின் முறையான தணிக்கையைத் தொடங்கியுள்ளது என்று செயலாளர் கூறியுள்ளார்.

முப்படைகளின் ஆதரவுடன், இந்த முயற்சி பெரும்பாலான துப்பாக்கிகளை வெற்றிகரமாக மீட்டெடுத்துள்ளது, ஒரு சில மட்டுமே கணக்கில் வராமல் உள்ளன. இந்த தணிக்கை சமூகத்தில் உள்ள குழப்பத்தை நீக்கவும், சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வழங்குவதைத் தடுக்கவும் உதவும் என்று பாதுகாப்பு செயலாளர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.




## “குற்றவாளிகளுக்கு எதிரான சட்டத்தை கடுமையாக்க தீர்மானம்”

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களின் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை பாதுகாப்பு அமைச்சு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2



## சுற்றுலாத்துறை வீழ்ச்சியடையும் அபாயம்

இலங்கையில் சுற்றுலாத்துறை மீண்டும் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சிறு மற்றும் நடுத்தர சுற்றுலா கைத்தொழிற்துறையினரின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக நாட்டில் அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் காரணமாகவே இந்த வீழ்ச்சி ஏற்படவுள்ளதாகவும் கூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## “காணிகளை விடுவிக்க வேண்டும்”



யாழ். வலி. வடக்கில் பொலிஸார் மற்றும் முப்படையினர் வசமுள்ள காணிகள் விடுவித்து குறித்த காணிகளை மக்களுக்கு கொடுக்க வேண்டுமென கடற்றொழில், நீரியல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில், பாதுகாப்புச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சுசார் குழுக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போது இதனை தெரிவித்துளுளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், வலி.வடக்கில் கடந்த 2009ஆம் ஆண்டு பொலிஸார் மற்றும் முப்படையினர் வசம் 23 ஆயிரம் ஏக்கர் காணி காணப்பட்டது. இக்காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வந்துள்ளன.

அதன்படி, 21,000 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்ட நிலையில் தற்போது 2,640 ஏக்கர் காணி

தொடர்ச்சி P2

## இலங்கையில் மரணதண்டனை நிறைவேற்றப்படுமா?



இலங்கையில் மரணதண்டனையை நிறைவேற்றுவது தொடர்பில் நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார விளக்கமளித்துள்ளார்.

அதன்படி, நாட்டின் நாட்டில் மரணதண்டனை நிறைவேற்றம் குறித்து எந்த சூழ்நிலையிலும் அரசாங்கம் ஆராயவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மரணதண்டனை தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரித்தபோதே நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “13இல் மாற்றமில்லை”

### பொதுமக்களின் அபிப்பிராயங்களுக்கும், பாராளுமன்ற ஆலோசனைக்கும் போதுமான காலவகாசம் வழங்கப்படும்



புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் வரை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் எவ்வித மாற்றமுமில்லாமல் அமுல்படுத்தப்படும். வாய்ப்பு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் சர்வஜன வாக்கெடுப்புக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டு, பாராளுமன்றத்தில் விரிவான கலந்துரையாடலுடன் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவோம் என அரச தரப்பின் பிரதம கொறடாவும், சுகாதார

தொடர்ச்சி P2

## “தேசிய பாதுகாப்புக்கான வகுப்புகளுக்கு அரசாங்கமே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது”



இந்த வரவு-செலவுத் திட்டத்திலிருந்தேனும் சரியான வறுமை ஒழிப்பு திட்டத்தை அரசாங்கத்தால் அடையாளம் காண முடியாது போயுள்ளது. கொள்ளை, ஊழல், சிறுவர் துஷ்பிரயோகம் நடக்கும் பயங்கரமான சூழ்நிலை உருவாகியுள்ளன. குழந்தைகள் முதல் இளம் தலைமுறையினர் முதல் முதியோர்கள் வரை என சமூகத்தில் சகலரும் அச்சத்தோடு வாழ வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. பாதாள உலகக் கும்பல் அல்லது போதைப்பொருள் காரணமாக நீதிமன்ற வளாகத்திற்குள் நுழைந்து, கொலை செய்யும்

தொடர்ச்சி P2



## வீதிக்கு இறங்கிய பட்டதாரிகள்...

“இலவசக் கல்வியில் இருந்து உருவான சுகாதார அறிவியல் பட்டதாரிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி, பட்டப்படிப்பு கடைகளில் இருந்து அரசாங்க சேவைக்குப் பட்டதாரிகளைச் சேர்க்கும் தேர்வு சதிகளை உடனடியாக நிறுத்து” என்ற தொனிப்பொருளில் பேராதனை பல்கலைக்கழகத்தின் இணை சுகாதார அறிவியல் பீட மாணவர் சங்கம் திங்கட்கிழமை (24) அன்று சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியது.

அரச பல்கலைக்கழகங்களில் இருந்து பட்டம் பெற்று வெளியேறும் அனைத்து பட்டதாரிகளையும் அரச சேவையில் இணைக்க வேண்டும் என்றும் அவர்கள் அரசாங்கத்தை வலியுறுத்தினர்.

# செவ்வந்தியின் புதிய படங்களை பாருங்கள்

### துல்லியமான தகவல்களை வழங்குபவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது



புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் ‘கணேமுல்ல சஞ்சீவ’ கொலை தொடர்பாகத் தேடப்படும் பெண் சந்தேக நபரான பின்புர தேவகே இஷாரா செவ்வந்தியின் சமீபத்திய புகைப்படங்களை பொலிஸார் திங்கட்கிழமை(24) வெளியிட்டுள்ளதுடன், அவரை கைது செய்யப் பொதுமக்களின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர்.

சந்தேக நபர், 243/01, ஜெயா மாவத்தை, நீர்கொழும்பு வீதி, கட்டுவெல்லகம என்ற முகவரியில் வசிக்கும் 25 வயதான பின்புர தேவகே இஷாரா செவ்வந்தி என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது தேசிய அடையாள அட்டை எண் 995892480V. ஆகும்.

வழக்கறிஞர் போல் நடித்த செவ்வந்தி, நீதிமன்ற வளாகத்திற்குள் ஒரு துப்பாக்கியை கடத்தி வந்து கொலையில் ஈடுபட்ட துப்பாக்கி தாரியிடம் ஒப்படைத்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## “பாதாளக் குழுக்களின் செயற்பாடு இல்லாதொழிக்கப்படும்”



கடந்த அரசாங்கங்கள் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு பாதாளக் குழுக்களை போசித்தார்கள். எமது அரசாங்கத்தில் பாதாளக் குழுக்களின் செயற்பாடு இல்லாதொழிக்கப்படும் என வீடமைப்பு பிரதியமைச்சர் டி.பி.சரத் தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, பாதாளக் குழுக்களுக்கிடையிலான மோதல் தற்போது அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

இது திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாடா?

தொடர்ச்சி P2

## “சட்டத்தின் ஆட்சியை பின்பற்றினால் குற்றங்களை கட்டுப்படுத்தலாம்”



அரசாங்கம் சட்டத்தின் ஆட்சியை பின்பற்றினாலே குற்றங்களை கட்டுப்படுத்தலாம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது

கடந்த 19ஆம் திகதி புதுக்கடை நீதவான் நீதிமன்றத்திற்குள் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்த சந்தேகநபர் ஒருவர் கொல்லப்பட்டார். அதன் பின்னர் 21ஆம் திகதி இரவு இரண்டு சந்தேகநபர்கள்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அரசாங்கமே செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது”

அளவுக்கு இந்த கொலைகாரர்களுக்கு அச்சமும் பயமும் அற்றுப்போவது எங்கனம்? என்பதில் பிரச்சினை காணப்படுகிறது. சட்டம் கோலோச்சுமாக இருந்தால், நீதி நிலைநாட்டப்படுமாக இருந்தால், குற்றவாளிகள் குற்றம் செய்யப் பயப்படுகிறார்கள். இந்தக் கொலைகள், கற்பழிப்புகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், கொள்ளைகள், குற்றச்செயல்கள் போன்றவற்றை இச்சமூகத்தில் நடத்தும் குழுக்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

யட்டியந்தோட்டை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, கொடூரம் தலைவிரித்தாடும், கொலைக் கலாசாரம் இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், தேசியப் பாதுகாப்பை உறுதி செய்ய, இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட மேலதிக வகுப்புகளுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால் தேசியப் பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது. இதுபோன்ற கொலைக் கும்பல்கள் சுதந்திரமாக உலவும் வரை, நாட்டு மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியாது என்பதில் சந்தேகமில்லை. கொலைகாரர்கள் மக்களின் சுதந்திரத்தை சீர்குலைக்க இடமளிக்க முடியாது. நாட்டின் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில், நாட்டில் நீதி மற்றும் நியாயத்தை நிலைநாட்டவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் ஐக்கிய மக்கள் சக்தி அதிகபட்ச ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும்.

மிகவும் புத்திசாலித்தனமாக மக்களை ஏமாற்றப்பட்டு வருகின்றனர். இன்று நாட்டில் மக்கள் நம்பிக்கையிழந்தும், விரக்தியடைந்தும் போயுள்ளனர். சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு, தேசியப் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் காணப்பட்டது. பெருந்தோட்டக் கைத்தொழில், விவசாய உற்பத்தி, சுயதொழில் துறை உட்பட சமூகத்தின் சகல பிரிவினருக்கும் பெரும் நம்பிக்கைகளை ஏற்படுத்தினர். இன்று மக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி, பல இடர்பாடுகளுக்கு மத்தியில் தமது வாழ்க்கை முன்னெடுத்து வருகின்றனர். வாழ்க்கைச் சுமையால் தாங்க முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இன்று நாட்டு மக்கள் பெரும் வாழ்க்கைச் சுமையால் அவதிப்பட்டு வருவதுடன், வாழ்க்கைச் சுமை அதிகரிக்க அதிகரிக்க, மக்கள் பெரும் பீடனைகளைச் சந்தித்து வருகின்றனர். இந்நிலையிலிருந்து விடுபட மக்களின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். இதற்கு ஏற்றுமதி உற்பத்தியை நோக்கி மக்களை நகர்த்த வேண்டும். பயன்படுத்தப்படாத தரிசு நிலத்தை வேலையில்லாத இளைஞர்களுக்கும், லயன் அறைகளில் வசிப்போருக்கும் வழங்கி, சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக அவர்களை வலுப்படுத்த வேண்டும். இந்த பணிகளை நிறைவேற்ற இந்த அரசாங்கத்திற்கு அக்கறையில்லை. ஏற்றுமதியை ஊக்குவிக்கும் தெளிவான திட்டமும் இந்த அரசிடம் இல்லை. இந்த அரசாங்கம் தொடர்ந்தும் மக்களிடம் பொய்களை கூறி, மக்களை ஏமாற்றி வருகிறது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# “குற்றவாளிகளுக்கு எதிரான சட்டத்தை கடுமையாக்க தீர்மானம்”

நாடளாவிய ரீதியில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் மேற்படி குழுக்களின் குற்றச் செயல்களை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா (ஓய்வு) தலைமையில் சனிக்கிழமை (22) அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது இது வலியுறுத்தப்பட்டது.

குற்றக் குழுக்களுக்கு பல தசாப்த காலமாக கிடைத்த அரசியல் பாதுகாப்பே இந்த குற்றச் செயல்களின் அதிகரிப்புக்குக் காரணம் என்று பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ், அத்தகைய குழுக்கள் இனி எந்த ஆதரவையும் பெறாது என்று அவர் உறுதியளித்தார்.

இந்தச் செயல்களைக் கட்டுப்படுத்தவும், சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும், சட்டத்தை விரைவாகவும், கடுமையாகவும் அமுல்படுத்துவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் உத்தரவுகளுக்கு இணங்க, பாதுகாப்பு அமைச்சு தனிப்பட்ட பாதுகாப்பிற்காக சட்டவிரோதமாக வழங்கப்பட்ட துப்பாக்கிகளின் முறையான கணக்கெடுப்பை ஆரம்பித்துள்ளது.

முப்படையினரின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில், ஒரு சிறிய எண்ணிக்கையைத் தவிர மற்றைய அனைத்து துப்பாக்கிகளையும் திரும்பப்பெறபட்டுள்ளது.

இந்த நடவடிக்கை சமூகத்தில் தற்போது நிலவும் குழப்ப நிலையை அகற்றவும் எதிர்காலத்தில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகள் வழங்கப்படுவதை தடுக்கவும் உதவும் என பாதுகாப்பு செயலாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னாள் இராணுவ அங்கத்தவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவது குறித்து பேசுகையில் பாதுகாப்புச் செயலாளர், அண்மைக் காலங்களில் குற்றங்களில் ஈடுபட்ட இவ்வாறான பலர் ஆயுதப் பயிற்சி பெற்று சிறிது காலத்தில் உத்தியோகப்பூர்வமற்ற முறையில் இராணுவ சேவையிலிருந்து வெளியேறியவர்கள் என்று குறிப்பிட்டார்.

பொலிஸாரின் உதவியுடன் இவர்களை கைதுசெய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் உறுதியளித்தார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டி.டபிள்யூ.ஆர்.டி. செனவிரத்ன, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துக்கொண்டனர்.

# “காணிகளை விடுவிக்க...

பொலிஸார் மற்றும் முப்படையினர் வசமுள்ளது. இக்காணிகள் மக்கள் பயன்படுத்தும் வகையில் விடுவிக்கப்பட வேண்டும்.

அத்துடன், வலி.வடக்கில் அண்மைக்காலத்தில் விடுக்கப்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்ளப்படாதுள்ளது. இதற்கு காரணம் குடியிருப்பு காணப்படவில்லை என கூறப்படுகின்றது.

வசாவிளான் சந்தி வரையான வீதி மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்படவேண்டும். முல்லைத்தீவு கேப்பாப்பிலவு காணி விடுவிக்கப்பட வேண்டும் என கூறியுள்ளார்.

அத்துடன், இதன்போது, கூட்டத்தில் பங்கெடுத்திருந்த இராணுவ உயர் அதிகாரிகள் விடுவிக்கப்பட்ட பகுதிகளை அரசாங்கத்திடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் மரணதண்டனை நிறைவேற்றப்படுமா?

மேலும், பாதுகாப்பு அமைச்சராகவும் உள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களுக்குத் தண்டனையை நிறைவேற்றுவது ஒரு வழிமுறையில்லை என்பது குறித்துத் தெளிவாகவுள்ளார்.

நீதிமன்ற கொலையின் பின்னர் இது குறித்து ஆராயவில்லை.

தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வை காண்பதற்கு நாங்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதுடன், மூலோபாயம் ஒன்றை வகுப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

நீதிமன்றம் தொடர்ந்தும் மரணதண்டனை தீர்ப்பினை வழங்குகின்ற போதிலும் இலங்கை 1976ஆம் ஆண்டுமுதல் மரணதண்டனையை நிறைவேற்றுவதை இடை நிறுத்தி வைத்துள்ளது என்றார்.

# சுற்றுலாத்துறை....

இது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அளவிலான சுற்றுலா தொழில்முனைவோர் சங்கத்தின் தலைவர் சமிர சேனக டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், நாளாந்தம் பல பகுதிகளில் தற்போது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இது சுற்றுலாத்துறைக்கு நேரடியாகப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

இந்த சம்பவங்களால் வீதியில் சுதந்திரமாகச் செல்வதற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே, சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதில் இது நேரடியாகத் தாக்கம் செலுத்தக்கூடும்.

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தொடர்ச்சியான துப்பாக்கிச் சூடு காரணமாகக் நாட்டின் சுற்றுலாத்துறை பாரிய நெருக்கடிக்கு உள்ளாகக்கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.

# “13இல் மாற்றமில்லை”

அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (23) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் 6ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான அநுரகுமார திசா நாயக்கவினால் 2025ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் புதிய அரசியலமைப்பு தொடர்பில் குறிப்பிடப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம்.

புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படும் வரை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் எந்த வித அதிகரிப்புக்களையோ குறைப்புக்களையோ செய்யாது செயற்படுத்தப்படும். சிறந்த வாய்ப்பு கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் பொதுமக்களின் அபிப்பிராயங்களுக்கும், பாராளுமன்ற ஆலோசனைக்கும் போதுமான காலவகாசம் வழங்கப்பட்டு புதிய அரசியலமைப்பினை உருவாக்குவோம், அதற்கு தயாராகவே உள்ளோம் என்றார்.

# “சட்டத்தின் ஆட்சியை பின்பற்றினால் குற்றங்களை கட்டுப்படுத்தலாம்”

பொலிஸாரின் காவலில் இருந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டனர், பொலிஸாருடனான மோதல் ஒன்றின் போதே இவர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது, அன்றிரவு கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற கொலையுடன் அவர்களுக்கு தொடர்பிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இவ்வாறான செயற்பாட்டை தடுப்பதற்கு சட்ட அமுலாக்கல் அதிகாரிகளான பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் மிகுந்த அவதானத்துடனும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் நாட்டின் நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான ‘என்கவுன்டர்’ கொலைகள் இடம்பெற்றுள்ளன. அதற்கான உரிய விசாரணைகள் இடம்பெறவில்லை என்பது குறித்து கவலைக்குரிய விடயம்.

குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

சமூகத்தில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு சட்டத்திற்கு புறம்பான் கொலைகள் ஒரு தீர்வாக அமையாது.

அரசாங்கம் சட்டத்தின் ஆட்சியை பின்பற்றினாலே குற்றங்களை கட்டுப்படுத்தலாம்.

பொலிஸாரினால் கொழும்பில் எவ்வாறு இருவர் கொல்லப்பட்டனர் என்பது குறித்து பதில் பொலிஸ் மா அதிபர் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

‘என்கவுன்டனர்’ கொலைகள் பொலிஸ்நிலையத்தில் கொலைகள் போன்ற பாரதூரமான சம்பவங்கள் மீண்டும் நிகழாமலிருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

பொலிஸ்நிலைய கொலைகள், என்கவுன்டர் கொலைகள் சமூகத்திலிருந்து முற்றாக அகற்றப்படுவதை உறுதி செய்வதற்காக இந்த கலாசாரத்திற்கு காரணமான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும், சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கும் நீதித்துறை மீது மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் இது அவசியமானது என குறிப்பிட்டுள்ளது.

# செவ்வந்தியின் புதிய படங்களை பாருங்கள்

சந்தேக நபரின் இருப்பிடம் குறித்து தகவல் தெரிந்தவர்கள், கொழும்பு குற்றப் பிரிவின் பணிப்பாளரை 071-8591727 என்ற எண்ணில் அல்லது சிசிரியின் பொறுப்பதிகாரியை 071-8591735 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக்கொள்கிறார்கள்.

சந்தேக நபரைக் கைது செய்வதற்கு வழிவகுக்கும் துல்லியமான தகவல்களை வழங்குபவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கவும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய முடிவு செய்துள்ளதாக பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது. அத்தகைய தகவல்களை வழங்குபவர்களின் அடையாளம் கண்டிப்பாக ரகசியமாக வைக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

# “கிழக்கிலும் அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்த வேண்டும்”

வடக்கு மாகாணத்தைப் போன்று கிழக்கு மாகாணமும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டது. ஆகவே கிழக்கு மாகாணத்திலும் அபிவிருத்தி பணிகளைத் துரிதப்படுத்த வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், வன்னி மாவட்ட எம். பியுமான ரிசாட் பதியுதீன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (24) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் 6 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் மேலும் பேசுகையில்,

நாட்டு மக்கள் இன,மத பேத வேறுபாடின்றி அரசாங்கத்தைத் தெரிவு செய்துள்ளார்கள். ஆகவே மக்களின் அபிலாசைகளையும்,எதிர்பார்ப்பையும் நிறைவேற்ற வேண்டிய தார்மீக பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. கடந்த அரசாங்கத்தைப் போன்று பேசிக் கொண்டும், செயற்பட்டுக் கொண்டும் அரசாங்கம் இருக்கக் கூடாது என்பது மக்களின் நிலைப்பாடு

வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளுக்கு அதிக மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. விவசாயம் இந்த நாட்டின் பிரதான துறை. விவசாயிகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இவ்விடயத்தில் அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதை வரவேற்கிறேன்.

இது நீண்டகால கோரிக்கையின் வெற்றி. மன்னார்- புத்தளம் பாதை முக்கியமானது. இந்த பாதையைப் புனரமைத்தால் வடக்கு-தெற்கு இணைப்புக்கு வசதியானதாக அமையும். சிலாவத்துறை பகுதியில் கலாசார மண்டபத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து 20 சத வீதமளவில் பணிகளை நிறைவு செய்தோம். கடந்த 4 ஆண்டுகாலமாக இந்த நிர்மாணிப்பு இழுபறி நிலையில் உள்ளது. இதனையும் அரசு கருத்திற் கொள்ள வேண்டும் என்றார்.

## போப் பிரான்சிஸ்சின் உடல் நிலை

# தொடர்ந்து கவலைக்கிடம்

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப்பின் உடல் நிலை மோசம் அடைந்து ள்ளதாகவும், அவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வத்திக்கான் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் (88 வயது), உடல் நலக்குறைவு காரணமாக ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக 14ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில், அவருக்கு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை (20) மாலை அவரின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதாகவும், அவரது இதயம் நன்றாக செயல்படுவதாகவும் வத்திக்கான் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கடந்த வெள்ளிக்கிழமை(21) காலை வெளியான தகவலின்படி, ‘இரவு அவர் நன்றாக ஓய்வெடுத்தார்.

இந்நிலையில், தற்போது, போப்பின் உடல் நிலை மோசம் அடைந்துள்ளதாகவும், ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வத்திக்கான் நிர்வாகம் சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவருக்கு இரத்தத்தில் ஒரு வகை இரத்த அணுக்கள் குறைவாக இருந்ததால் இரத்தம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# “பாதாளக் குழுக்களின் செயற்பாடு இல்லாதொழிக்கப்படும்”

என்பது தொடர்பில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசியல் வங்குரோத்து நிலையடைந்துள்ளவர்கள் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற சுலோகத்தை தற்போது கையிலெடுத்துள்ளார்கள்.

கடந்த அரசாங்கங்கள் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு பாதாளக் குழுக்களை போசித்தார்கள்.

எமது அரசாங்கத்தில் பாதாளக் குழுக்களின் செயற்பாடு இல்லாதொழிக்கப்படும்.தேசிய பாதுகாப்புக்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

மேலும், 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மக்களின் நலன் சார்ந்து உருவாக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் சிறந்த திட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளது என்று தனிப்பட்ட முறையில் குறிப்பிடும் எதிர்தரப்பினர் மக்கள் மத்தியில் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிரான

> **“ அரசியல் வங்குரோத்து நிலையடைந்துள்ளவர்கள் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற சுலோகத்தை தற்போது கையிலெடுத்துள்ளார்கள்**

கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். வங்குரோத்து நிலையில் இருந்து நாடு முழுமையாக மீட்சிப் பெறவில்லை. சமூக கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் தான் இம்முறை வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் முதலில் நாட்டு மக்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்த வேண்டும்.

பொருளாதார ரீதியில் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி விட்டு தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த முடியாது. ஆகவே இம்முறை வரவு-செலவுத் திட்டம் பொருளாதாரம் மற்றும் நடுத்தர மக்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்றார்.

### ஆரையம்பதி வாள் வெட்டு சம்பவம்

# நால்வருக்கு விளக்கமறியல்

## இருவருக்கு நீதிமன்ற உத்தரவு

மட்டக்களப்பு ஆரையம்பதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது வாள் வெட்டு தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நால்வரையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

ஆரையம்பதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் மின்னொளியில் இளைஞர்கள்



விளையாடிக் கொண்டிருந்த போது, அங்கு வாள்களுடன் நுழைந்த 5 பேர் கொண்ட வாள் வெட்டுக்குழு விளையாடிக் கொண்டிருந்த சிலர் மீது துரத்தி துரத்தி தாக்குதல் நடத்தியதில் இருவர் படுகாயமடைந்து மட்டு போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் தப்பி ஓடி தலைமறைவாகியுள்ள நிலையில் ஞாயிற்றுக்கிழமை(23) இரவு 4 பேரை கைது செய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் திங்கட்கிழமை(24) ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 4ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் ஏனைய இரு சந்தேகநபர்களை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# “நாடு பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது”



மக்களின் வருமானம் குறைந்து, வாழ்வாதாரம் வீழ்ச்சி கண்டாலும் அரசாங்கம் தன் பொறுப்பை நிறைவேற்றத் தவறி விட்டது. மக்களின் உயிரைப் பாதுகாக்கவும், மனித வளத்தைப் பாதுகாக்கவும் தவறி விட்டது. தேசிய பாதுகாப்பு தொடர்பில் பெரிதாகப் பேசியவர்கள், தற்போதைய பலவீனமான அரசாங்கத்தின் கீழ், தேசிய பாதுகாப்பிற்கு பதிலாக, நாட்டை பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளிவிட்டுள்ளனர். சட்டம் கிடப்பில் போடப்பட்டு, நீதி நிலைநாட்டப்படாது, சட்டத்தின் ஆட்சி இல்லாது, நீதிமன்றமும் கொலைக்களமாக மாறியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் ஐக்கிய மக்கள் சக்தியின் ருவன்வெல்ல தேர்தல் தொகுதி அமைப்பாளர் நிஹால் பாரூக்கின் ஏற்பாட்டின் கீழ் ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் ஞாயிற்க்கிழமை (23) கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்

மேலும் அவர் கூறியுள்ளதாவது,

மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய அரசாங்கம் தனது பொறுப்பை சரியாகச் செய்யாமையால் கொலை கலாசாரமும், காட்டுச் சட்டமும் கோலோச்சியுள்ளன. இவ்வாறான நிலையில் நாட்டு மக்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க அரசால் முடியாது போயுள்ளன. சுதந்திரமான அச்சமில்லாத சமூகத்தை உருவாக்க முடியாதுபோயுள்ளது. மக்களை கொலை செய்யும் கலாசாரம் கூட கோலோச்சியுள்ளது.

இன்றைய செய்திகளைப் பார்க்கும்போது, இந்தக் கொலைகள் சர்வ சாதாரணமாகி விட்டன. இவ்வாறான நிலையில், ஒரு நாட்டை ஆள முடியாத அரசாங்கத்தால், உள்ளூராட்சி மன்றங்களை ஆள முடியாது போகும். மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை இவர்களால் செய்ய முடியாது போயுள்ளன. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத இந்த அரசாங்கத்திற்கு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இந்த அரசாங்கத்திற்கு தெளிவான செய்தியை வழங்க வேண்டும். மேடைக்கு மேடை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு துரோகம் செய்து, ஆட்சிக்கு வந்த இவர்கள், அன்று சொன்னதை நிறைவேற்றாது வேலையில்லா பட்டதாரிகளை கைவிட்டுள்ளனர்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை 6 மாதங்களுக்கு ஒருமுறை அதிகரிப்போம் என்று கூறிய தற்போதைய அரசாங்கம் அனைவரையும் ஏமாற்றியுள்ளது.

ஒட்டுமொத்த சமூகத்தையும் ஏமாற்றியுள்ள இந்த அரசாங்கத்திற்கு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நல்லதொரு செய்தியை நாம் சொல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# வேகமாக பரவும் தீ; உதவி கோரும் வனத்துறை

சிவனொளிபாத மலை தொடர் வனப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (23) ஏற்பட்ட தீயானது, வேகமாகப் பரவி வருவதாகவும், தீயைக் கட்டுப்படுத்த விமானப்படையின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் ஹட்டன் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நல்லதண்ணிய, வாலமலைத் தோட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(23) மதியம் ஏற்பட்ட தீ, அப்பகுதியில் நிலவும் மிக வறண்ட காலநிலையுடன் மலை உச்சிகளில் வேகமாகப் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வனப்பகுதிக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டிருக்கலாம் என நல்லதண்ணிய பொலிஸார் சந்தேகிக்கின்றதுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் வனப்பகுதிகளுக்கு தீ வைக்கும் நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தைத் தொடர்பு கொள்ளுமாறு வனத்துறையினர் கேட்டுக்கொள்கிறார்கள்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தேசபந்து தென்னகோனுக்கு எதிரான மனு தொடர்பில் நீதிமன்று உத்தரவு

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராக (ஐ.ஜி.பி.) நியமிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது அடிப்படை உரிமைகள் மனுக்கள் திங்கட்கிழமை (24) அன்று உயர் நீதிமன்றத்தால் வாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 06, 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமெனவும் உத்தரவிட்டுள்ளது.



மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் நியமிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரண திங்கட்கிழமை(24) அன்று உயர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, தேசபந்து தென்னக்கோன் சார்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றுவதற்கு தேசபந்து தென்னக்கோனுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால், மனுக்கள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டத்தரணியின் கோரிக்கையை கருத்தில் கொண்ட நீதவான், இந்த மனுக்கள் எதிர்வரும் மே மாதம் 06, 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார்.

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச் சூடு; உதவியவர் கைது

கொட்டாஞ்சேனை பகுதியில் கடந்த 21ஆம் திகதி ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு உதவிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டாஞ்சேனை பகுதியில் கடந்த 21ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் நடத்திய துப்பாக்கிச் சூடு தொடர்பாக கொழும்பு வடக்கு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகம் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் 28 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (23) பிற்பகல் மோதர மெத்சந்த செவன பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணையில், அவர் வெளிநாட்டில் மறைந்திருக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி, இந்த நாட்டில் குற்றச் செயல்களை நடத்தி வருகின்றமை தெரியவந்துள்ளது.

இந்த சந்தேக நபர், கொட்டாஞ்சேனையில் துப்பாக்கிச் சூடு நடத்தியவரை கொழும்பு புறகோட்டையிலிருந்து கொஸ்கஸ் சந்தி-பகுதியில் உள்ள அவரது மனைவியின் வீட்டிற்கு அழைத்துச் சென்று, துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை வழங்கியமை தெரியவந்துள்ளது.

மேலும் சந்தேக நபரை கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடைசாய்ந்த லொறியால் போக்குவரத்து பாதிக்கப்பு

செ.திவாகரன்

நானுஓயா டெஸ்போட் பகுதியில் திங்கட்கிழமை (24) அதிகாலை மணல் ஏற்றிச் சென்ற லொறியொன்று விபத்துக்குள்ளானதில் அந்த வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மஹியாங்கனை பகுதியிலிருந்து தலவாக்கலைக்கு மணல் ஏற்றிச் சென்ற லொறியொன்றே திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக அதன் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தினால் நுவரெலியா - தலவாக்கலை ஏ - 7 பிரதான வீதியின் போக்குவரத்து ஒரு மணித்தியாலம் பாதிக்கப்பட்டது. எனினும் பிரதேச வாசிகளின் ஒத்துழைப்புடன் உடனடியாக வீதியில் கொட்டிய மணல்களை அகற்றி போக்குவரத்தினை வழமைக்குக் கொண்டு வர முடிந்துள்ளது.

விபத்தின் போது, லொறியின் சாரதி மட்டும் பயணித்துள்ளதாகவும், அவர் தெய்வாதீனமாகச் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது.



# கைதான 32 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 32 மீனவர்களையும், அவர்களின் 5 விசைப்படகுகளையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவானால் ஞாயிற்றுக்கிழமை (23) உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலம் ராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 32 மீனவர்கள் அவர்களின் அதி நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் 5 படகுடன் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலை கடற்படையினரால் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் வடமத்திய மாகாண கடற் படையினரின் கூட்டு நடவடிக்கையின் போதே கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்ட குறித்த 32 இந்திய மீனவர்களும் கடற்படையின் விசாரணைகளின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை (23) மாலை மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கபட்ட நிலையில் மேலதிக விசாரணைகளின் பின்னர் 32 மீனவர்களும் மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த 32 மீனவர்களையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 32 மீனவர்களையும், அவர்களின் 5 விசைப்படகுகளையும் மீட்க இந்திய மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் 32 கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

# “பொலிஸார் என்னை சித்திரவதை செய்தனர்”

எம்.றொசாந்த்

யாழ். நெல்லியடி பொலிஸார் தன்னை கைது செய்து, சித்திரவதைக்குட்படுத்தி கையை முறித்துள்ளதாக நெல்லியடி பகுதியைச் சேர்ந்த நந்தகுமார் இலங்கேஸ்வரன் என்பவர் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் திங்கட்கிழமை (24) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த 18ஆம் திகதி எனது அம்மா வீட்டிற்கு அருகில் உள்ள ஆலயம் ஒன்றின் முன்னால் நின்ற போது, முச்சக்கர வண்டியில் வந்த பொலிஸார் , என் மீது தாக்குதல் மேற்கொண்டு, கைவிலங்கு இட்டு, முச்சக்கர வண்டியின் உள்ளே கீழே போட்டு , அவர்களது கால்களுக்குள் என்னை அழுத்திப் பிடித்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

அங்கு எதற்காக என்னைத் தாக்கி, கைது செய்தீர்கள் என கேட்ட போது, வயர் வெட்டிய சம்பவம் தொடர்பில் என கூறினார்கள். எனக்கு அப்படி ஒரு சம்பவம் தெரியவில்லை.

பின்னர் எனக்கு கை வலி ஏற்பட்டு , நான் வலியினால் துடித்து என்னை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறிய போது மந்திகை வைத்தியசாலையில் என்னை அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் . போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டேன்.




வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் வேளையில் வீடியோ அழைப்பு ஊடாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் என்னைப் பார்வையிட்டு, எனக்குப் பிணை வழங்கி எனது வழக்கை எதிர்வரும் 10ஆம் மாதத்திற்கு திகதியிட்டுள்ளார்.

என் மீதான தாக்குதல் மற்றும் சித்திரவதை குறித்த மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் . பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். பெயிண்டிங் வேலைக்குச் சென்று எனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன். தற்போது பொலிஸாரின் தாக்குதலால் எனது கை முறிந்து உள்ளதால் என்னால் வேலைக்குச் செல்ல முடியவில்லை. அதனால் எனது குடும்பத்தின் வாழ்வாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது” என அவர் தெரிவித்தார்.

அதேவேளை , குறித்த நபரினால் மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய எதிர்வரும் 04ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு பொலிஸாருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் . பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

# உடமையில் வாளொன்றை வைத்திருந்தவர் கைது

பாறுக் ஷிஹான்

வாள் ஒன்றை தனது உடமையில் மறைத்து வைத்திருந்த நபர் ஒருவர் சம்மாந்துறை பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை (23) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பெருங்குற்றப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது 39 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சென்னல் கிராமம் 02 பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன் 2 அரை அடி நீளமான வாள் ஒன்றும் சந்தேக நபர் வசம் இருந்து



மீட்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேக நபர், சான்று பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# பிரதிவாதிகளை தெருவில் தூக்கிலிட முடியாது

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் நபர்கள், ஆயுதங்களை மறைத்துவைத்திருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றபோது, மறைத்து வைத்திருந்த கைக்குண்டை எடுத்து பொலிஸார் மீது வீச முயன்றனர். அல்லது பொலிஸாரின் வசமிருந்த ஆயுதங்களை அபகரிக்க முயன்றனர். பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தியதில் இன்றேல் தற்பாதுகாப்புக்காக நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேக நபர்கள் உயிரிழந்தனர் என்பது ஒன்றும் புதுய கதையல்ல.

சந்தேக நபர்கள் ஆயுதங்களை மறைத்து வைத்திருந்தால், அந்த இடத்தின் அடையாளங்களைப் பெற்றுக்கொண்டு, அவற்றை ஏன்? பொலிஸார் மீட்டெடுக்க முடியாது. அது ஒருபுறமிருக்க, மற்றுமொரு பக்கத்தில், சந்தேக நபர்கள் கைவிலங்கு இடப்பட்டே, ஆயுதங்களைக் காண்பிப்பதற்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர். அவ்வாறு இருக்கையில், பொலிஸாரின் ஆயுதங்களை அவர்களால் எவ்வாறு அபகரிக்க முடியும்.

பாரிய குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படும்போது, வழக்கை விசாரிக்க எடுக்கும் நேரம் காரணமாக, குற்றவாளி விடுவிக்கப்பட்டு சமூகத்திற்குத் திரும்பும் அபாயம் உள்ளது என்பதை பொலிஸார் அறிந்திருக்கிறது.

எனவே, அந்த சந்தேக நபரைச் சுட்டுக் கொல்வதன் மூலம், அதிக முயற்சி இல்லாமல் வேலையை முடிக்க முடியும்.

சந்தேக நபர்களை பொலிஸார் குற்றவாளிகளாக்க முடியாது. அதற்கே நீதிமன்றங்கள் இருக்கின்றன. எனினும், நாட்டில் நடக்கும் சம்பவங்களை பார்க்குமிடத்து, பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் வலுக்கிறது.

எனினும், கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்குச் சென்றிருந்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்றும், பாதாள உலகக் கும்பல்களின் செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் கூறியிருந்தார். உண்மையில் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்.

சந்தேகபரை நீதிமன்றத்துக்கு அழைத்து வரும்போதும், சிறைச்சாலைகளுக்கு மீண்டும் கொண்டு செல்லும் போதும், அவர்களின் பாதுகாப்புக்கு பொலிஸாரே பொறுப்பு. எனினும், சந்தேகநபர்கள் பகிரங்கமாகவே சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

நீதிமன்ற விதிகளின்படி, பிரதிவாதிகளைத் தெருவில் தூக்கிலிட முடியாது, மேலும் விசாரணைக்குப் பிறகுதான் பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் பரிந்துரைக்க முடியும். சில நேரங்களில் அது சிறைத்தண்டனை. சில நேரங்களில் அது மரண தண்டனையாக இருக்கும்

நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தாலும், வெலிக்கடை சிறையில் உள்ள மரணதண்டனை நிறைவேற்றுபவர் (அலுகோசு) தண்டனையை நிறைவேற்றுவதில்லை. (தற்போது அலுகோசு இல்லை). ஏனெனில் அந்த தண்டனையை அமல்படுத்த ஜனாதிபதியின் பரிந்துரை தேவை. 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜெ. ஆர். ஜெயவர்த்தனே குற்றவாளிகளின் மரணதண்டனையை அதிகாரப்பூர்வமற்ற முறையில் நிறுத்தினார், பின்னர் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

சர்வதேச சட்டத்தின்படி, ஒரு வழக்கில் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்படுவதற்கு முன்பு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவரைக் கொல்வது நீதிக்குப் புறம்பான கொலை என்று அழைக்கப்படுகிறது. இதுபோன்ற கொலைகளைச் செய்யும் நாடுகளுக்குச் சர்வதேச அரங்கில் அங்கீகாரம் இல்லை என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


மொஹமட் பாதுஷா

# முஸ்லிம்களின் விவகாரங்களை தெளிவுபடுத்துவது யார்?

ஒரு சமூகத்தின் பிரச்சினைகளுக்கு அரசாங்கமோ சம்பந்தப்பட்ட தரப்பினரோ தீர்வு தருவார்களா? இல்லையா? என்பது இரண்டாவது விடயம்தான். ஆனால், அச் சமூகத்தின் பிரச்சினைகளை, அபிலாஷைகளை, எதிர்பார்ப்புக்களை சரிவர முன்வைப்பதுதான் முதலாவது காரியமாகும்.

இலங்கை முஸ்லிம்களுக்கான அரசியலில் இந்த விடயத்தில் பாரிய குறைபாடு காணப்படுகின்றது. அதுவும் தேசிய மக்கள் சக்தி ஊடாகவும் ஏனைய கட்சிகள் ஊடாகவும் அரசியலில் குறிப்பிடத்தக்க முன் அனுபவம் அற்றவர்கள் கணிசமாளளவில் நாடாளுமன்றத்திற்கு வந்திருக்கின்ற இன்றைய சூழலில் அந்த இடைவெளி வெகுவாக உணரப்படுகின்றது.

நாட்டின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நிலைவரங்களில், ஆளும் தரப்பு எம்.பிக்களின் நகைப்பூட்டும் விளக்கங்களில், குரங்குக் கதைகளில், முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளில் அல்லது நாட்டில் தொடராக நடைபெறுகின்ற கொலைகளில் நாம் கவனம் செலுத்தியுள்ளதால், முஸ்லிம் அரசியலில் ஏற்பட்டுள்ள இந்த பின்னடைவைக் கவனிக்காது விட்டிருக்கலாம். ஆனால், நிஜத்தில், கடந்த மூன்று தசாப்தங்களாகவே முஸ்லிம் அரசியலில் ஏற்பட்டிருந்த பின்னடைவு இப்போது ஒருவித தேக்கநிலையை அடைந்திருப்பதை, உன்னிப்பாகக் கவனிப்போர் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

புதுமுகங்கள் என்ற தகுதி மட்டும் ஒரு மக்கள் பிரதிநிதிக்கு போதாது. உண்மையில், என்.பி.பி. ஊடாகவோ ஐக்கிய மக்கள் சக்தி ஊடாகவோ அல்லது முஸ்லிம் கட்சிகளின் சார்பாகவோ முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கக் கூடிய இயலுமையைக் கொண்டவர்கள் நாடாளுமன்றத்திற்கு வந்திருக்க வேண்டும். அவ்வாறான சிலரும் எம்.பியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், அரைவாசிக்கு கூடுதலானோர் புதுமுகங்கள். சிலர் அறிவாளிகள், படித்தவர்கள் என காட்டிக் கொள்பவர்கள். இந்த மாற்றம் ஒரு வகையில் சிறந்தது என்றாலும், வரலாற்று ரீதியான, நீண்டகால விவகாரங்களைக் கையாள்வதில் ஆழமான புரிதல் இன்மை என்பது பாதகமான நிலைமையாகும்.

இன்னும் சொல்லப் போனால் ஆளும் தரப்பு முஸ்லிம் எம்.பிக்கள் எல்லோருமே புதியவர்கள். முஸ்லிம்களுக்கான அரசியல் என்ற தளத்தில் செயற்படாமல், ஜே.வி.பி. அல்லது இலங்கையர் என்ற பொதுவான சிந்தனையோடு பணியாற்றியவர்கள். இதில் சாதகங்களும் உள்ளன.

முஸ்லிம் சமூகத்தின் நீண்டகால, குறுங்கால பிரச்சினைகளை அறியாத பலர் இன்று எம்.பிக்களாகியுள்ளனர். முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட வலியை, புலிகளாலும் ஆயுதக் குழுக்களாலும் வடக்கு, கிழக்கில் வஞ்சிக்கப்பட்ட கதைகளை பெரும்பாலும் உணர்வுபூர்மாக அறியாதவர்கள் பலர் உள்ளனர்.

அழுத்கம, திகண, அம்பாறைக் கலவரங்கள் இடம்பெற்ற போது அல்லது உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு முஸ்லிம்கள் நசுக்கப்பட்ட போது இதனைப் பற்றிய எந்த சிந்தனையும் இல்லாமல் தாம் உண்டு தமது தொழில் உண்டு என்று இருந்த பலர், இன்று ஆளும், எதிர்க் கட்சிகள் ஊடாக முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளாக தியவன்ன ஓயாவுக்கு வந்துள்ளனர்.

இம்முறை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட விரல் விட்டு எண்ணக்கூடிய ஓரிரு புதுமுக முஸ்லிம் எம்.பிக்களும், மீண்டும் எம்.பி.யாகியுள்ள சீனியர்கள் சிலரும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை அவ்வப்போது முன்வைக்கின்றனர் என்பது ஆறுதலான விடயம் எனலாம்.

ஆனால், கடந்த காலத்தில் பல முஸ்லிம் எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் வாழாவிருந்து காலத்தைக் கடத்தியது போல பெரும்பாலான ஆளும், எதிரணி முஸ்லிம் எம்.பிக்கள் பலர் சும்மா பெயருக்கு வந்து விட்டுப் போவதாகவே தெரிகின்றது. நாடாளுமன்றத்திற்கு வெளியிலும் சமூகத்தைப் பற்றிப் பேசுவது குறைவாகவுள்ளது.

நாட்டில் இப்போது முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இல்லை. என்ன நியாயம் சொன்னாலும் இது பெரிய வரலாற்று தவறாகவே அமையும். எனவே, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள், முஸ்லிம் சமூகத்துடன் தொடர்புபபட்ட விவகாரங்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக மாறி விடுவதைக் காண்கின்றோம்.

ஆளும் தரப்பில் எம்.பியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள பலருக்கு இந்த வாய்ப்பு என்பது அந்தக் கட்சி கொடுத்த பெரும் வரப்பிரசாதமாகும். என்.பி.பி. இல்லையென்றால் பலர் எம்.பியாக வந்திருக்கவே முடியாது. அதற்காகவும், இலங்கையர் என்ற பொதுவான கோட்பாட்டை உடைக்கக் கூடாது என்பதற்காகவும் கட்சியின் கட்டுக்கோப்புக்காகவும் பலர் மௌனம் காப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

ஆளும் தரப்பில் மட்டுமல்ல, எதிரணியில் உள்ள சில முஸ்லிம் எம்.பிக்களுக்கும் முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றிய கடந்தகால வரலாறு, சிக்கல்கள் தெரியாது. எனவே, அவர்கள் பேசிச் சாதிப்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று தெரியவில்லை.

குறிப்பாக அரசாங்கம் முஸ்லிம் எம்.பி. ஒருவரை அமைச்சராக நியமிக்காவிட்டாலும் கூட, ஆளும் தரப்பு முஸ்லிம் எம்.பிக்கள், ஒரேயொரு பிரதியமைச்சர் ஆகியோர் நிழல் அமைச்சரைப் போல இருந்து முஸ்லிம்களின் விவகாரங்களைக் கையாள்வார்கள் என்ற எதிர்பார்ப்பு மக்களுக்கு உள்ளது.

ஆனால், அண்மையில் அமைச்சர் சரோஜா, முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் இரண்டொரு தடவை கருத்துத் தெரிவித்திருக்கின்றார். முஸ்லிம்களின் விவாக விவாகரத்து சட்டத்தை மாற்றியமைப்பது பற்றிச் சொல்லியிருக்கின்றார். ஆனால், அமைச்சரவை பேச்சாளர் அப்படி எந்த முடிவும் எடுக்கவில்லை என்று கூறியுள்ளார்.

இந்தச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்பது முஸ்லிம்கள் உடன்பட்ட விடயம்தான். அதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டு இரண்டு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. எனவே, இதுபற்றி சம்பந்தப்பட்ட முஸ்லிம் அதிகார தரப்புக்களும் உரையாடல்களை மேற்கொண்டு உடன்படுவதற்கு முன்னதாக, ஊடகங்களுக்கு அறிக்கை விடுவது, முஸ்லிம்களை முகம் சுழிக்க வைப்பதாகவே உள்ளது.

இது குறித்து ஆளும் தரப்பின் முஸ்லிம் எம்.பிக்கள் ஏற்கெனவே அமைச்சருக்குத் தெளிவுபடுத்தியிருந்தால் அல்லது பகிரங்கமாக அறிக்கையொன்றை விட்டிருந்தால் இந்த குளறுபடி ஏற்பட்டிருக்காது. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராக இருந்தாலும், ஒரு சமூகத்தின் விவகாரத்தைக் கையாள்வதில் கவனம் தேவை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

இவ்வாறான முஸ்லிம்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கான தெளிவை ஆளும் தரப்பு எம்.பிக்கள் இரகசியமாக வழங்குகின்றார்களா? என்பது தெரியவில்லை. ஆனால், பொது வெளியில் அப்படி எந்த அபூர்வமும் நிகழவில்லை.

முஸ்லிம்களுக்கு அமைச்சு ஏன் வழங்கப்படவில்லை என்று மக்கள் கேள்வி எழுப்பிய போது, நொறுக்குத்தீனி தின்று கொண்டிருந்த எம்.பியை நாடே பார்த்தது. அத்தி பூத்தாற்போல் பேசிய முஸ்லிம் எம்.பிக்கள் சிலரின் அழகு மொழி நடையையும் (?) கனதியையும் கூட நாம் கவனிக்கத் தவறவில்லை.

கடந்த காலத்தில் முஸ்லிம் கட்சிகளின் ஊடாக தெரிவு செய்யப்பட்டவர்கள் மஹிந்தவுக்கு, கோட்டாவுக்கு, ரணிலுக்கு, மைத்திரிக்கு, சஜித்திற்கு ஆதரவளித்தனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் தாம் சார்ந்திருந்த பெருந்தேசியக் கட்சிகளில் நிலைப்பாடே சரி என்று கூறினர். அவர்களது ஆதரவாளர்களும் ஜால்ரா அடித்தனர்.

அந்த நிலைமைதான் ஆளும் தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் இன்று வரை நீடிக்கின்றது என்பதற்கு நமக்குத் தினமும் அத்தாட்சிகள் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. ஆளும் தரப்பை ஜே.வி.பி., என்.பி.பி ஆதரவாளர்கள் நியாயப்படுத்த முனைவதையும், நல்ல விடயங்களையும் எதிரணி ஆதரவாளர்கள் விமர்சிப்பதையும் பட்டவர்த்தனமாக காணலாம்.

எதிரணியில் உள்ள றவூப் ஹக்கீம், முஜிபுர் ரஹ்மான், றிசாட் பதியுதீன், இம்ரான் மஹ்ரூப், உதுமாலெப்பை, தாஹிர் போன்ற எம்.பி.க்கள் அவ்வப்போது பேசிக் கொண்டிருப்பது நல்ல விடயமாகும். குறிப்பாக ஜனாஸா எரிப்பு மீதான ஹக்கீமின் தனிநபர் பிரேரணை வரவேற்கத்தக்கதாகும்.

ஆனால், முன்னைய சில அரசாங்கங்களைப் போல, இந்த அரசும், ‘எங்களுக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள், அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளோம்.


எமக்கு யாரும் அறிவுரை கூறத் தேவையில்லை’ என்ற அதிகாரத் தோரணையில் செயற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

எனவே, ஆளும் தரப்பில் உள்ள முஸ்லிம் எம்.பிக்கள் ஒரு முக்கியமான வகிபாகத்தை எடுக்க வேண்டியுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் என்னவென்பதையும், அவர்களது உரிமைகள் எவ்விதம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் மேலிடத்திற்கு; தெளிவுபடுத்த வேண்டியது தார்மீகக் கடமையாகும்.

இது விடயத்தில் முன் அனுபவமும், பின்னணி பற்றிய அறிவும் போதாது என்றால் அது பற்றி தெரிந்தவர்களிடம் அல்லது முன்னனுபவம் உள்ள எம்.பிக்களிடம் கேட்கலாம். எது எப்படியோ, முஸ்லிம்களின் உரிமைகளும் நலன்களும் வெளிப்படையாகவே பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். அதற்கான அழுத்தத்தை வெளியில் உள்ள ஏனைய முஸ்லிம் எம்.பிகக்ள், முன்னாள் எம்.பிக்கள் கொடுக்க வேண்டும். இங்கே முஸ்லிம் சமூகம் என்று கூறப்படுவது இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் வாழ்கின்ற, என்.பி.பிக்கு வாக்களித்த, வாக்களிக்காத, இன்னும் வாக்குரிமை கிடைக்காத அனைத்து முஸ்லிம்களும் ஆவர்.

எனவே, முஸ்லிம்கள் தொடர்பான விவகாரங்கள் என்று வருகின்ற போது, அவர்கள் சார்ந்து இயங்குகின்ற மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்புக்கள், மூத்த அரசியல்வாதிகள், மத நிறுவனங்களுடன் உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும்.

மாறாக, கொடி பிடிக்கின்ற சில குழுக்கள், புதுமை வாதிகள் என்ற கூட்டம் அல்லது தமது கட்சிக்கு ஆதரவானோரின் கருத்துக்களை மட்டும் வைத்துக் கொண்டு, ஒரு தனியான இன, மத குழுமத்தின் விவகாரங்களைக் கையாளக் கூடாது.



## வாழ்வியல் தரிசனம்

ஆடம்பரமாக வாழ்ந்தால் தான் தங்களுக்குக் கௌரவம் கிடைக்கும் என நம்புகின்றார்கள். ஒருவரின் பெறுமதியை வெளிப் பார்வையில் கண்டு மதிப்பிடுவது பெரும்பாலும் தவறாகவே அமைந்துவிடுகின்றது.

ஆடம்பரமாகத் தோற்றம் காட்டுபவர்கள் யாவரும் கல்வியறிவு, பணபலம் கொண்டவர்கள் என்றே பலரும் கருதுகின்றார்கள். பார்வையால் எவரையும் ‘இப்படிப்பட்டவர்தான்’ எனக் கண்டுபிடிக்க முடியாது.

முகநூலில் நண்பர்களாகி, அவர்களையே நம்புபவர்கள், எப்படி நேரில் பார்ப்பவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியும்?

இந்த உலகம் பொய்மையில் அழகைக் காண்கின்றது. ஒழுக்கம் என்றால் என்ன எனத் தேடுவதும் கிடையாது.எவரையும் உடன் சந்தேகப்படவும் கூடாது. அதேவேளை, எவரையும் உடன் நம்புவதும் சரியானதில்லை.

இன்றைய உலகில் கற்றவர்கள், செல்வந்தர்கள் கூட, பண்பு தெரியாமல் வாழ்ந்து வருகின்றார்கள். எளிய நிலையில் தோற்றம் காட்டுபவர்களை மட்டுமல்ல, யாவரையும் கௌரவப்படுத்த வேண்டும். எவர் எப்படித் தோன்றினாலும், பண்பான மனிதர்களாக இருந்தால், அவர்களுடன் பேசும்போதும் பழகும்போதும் உண்மை நிலை புரியும். எவரையும் மதித்து நடப்பவரே ஒழுக்கமான மனிதர்.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### லொக்கல்ல ஓயா பாலத்தால் மக்களின் உயிருக்கு ஆபத்து

பசறை தேர்தல் பிரிவில் உள்ள கல்கேகும்புரவிலிருந்து 5 கிராமங்களை இணைக்கும் ஒரே வீதியில், லொக்கல்ல ஓயாவிற்கு மேல் அமைந்துள்ள பாலம் கடுமையாகச் சேதமடைந்துள்ளதால் மக்களின் உயிருக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.சில நாட்களுக்கு முன்பாக, பாடசாலை மாணவி ஒருவர் உட்பட சில நபர்களும் குறித்த பாலத்தில் இருந்து விழுந்து காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். கடுமையாக நோய்வாய்ப்பட்ட நோயாளிகளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது, இந்தப் பாலத்தைக் கடப்பது மிகவும் கடினம் என்றும் இப் பகுதியில் உள்ள கிராமங்களில் மரணச் சம்பவங்கள் நிகழ்ந்தால் இவ்வழியாகச் சவப்பெட்டி கொண்டு செல்லும் போது ஒரு கொடிய போராட்டம் நடைபெறும் எனவும் கிராம மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் பொறுப்பான அனைத்து துறைகளுக்கும் தகவல் வழங்கினாலும் எந்தப் பயனும் இல்லை என்றும் அரசியல்வாதிகள் ஒவ்வொரு தேர்தலிலும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

கல்கே கும்புர, வெல்கொல்ல, கல் இஹா, அலவதுகொட மற்றும் கொன்கடுவ கிராமங்களைச் சேர்ந்த சுமார் 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் பாலத்தைப் புனரமைத்து, கொன்கிரீட் பாலம் அமைத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– பாலித்த ஆரியவன்ச





## “அச்சுறுத்தலுக்கு இடமில்லை”

பாதாள குழுக்களுக்கிடையிலான மோதல் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துமளவுக்கு அதிகரிக்க நாங்கள் இடமளிக்கப்போவதில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (24) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து, பாதாள குழுக்களுக்கிடையிலான மோதல், இதனால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு பகுறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் பிரதமர் கூறுகையில், நாட்டில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இந்த சபைக்கு பல தடவைகள் தெளிவுபடுத்தியுள்ளார். அதேபோன்று, ஜனாதிபதியும் தெளிவுபடுத்தியுள்ளார். இந்த சம்பவங்களை நாங்கள் மிகவும் பாரதூரமாகவே பார்க்கிறோம் பாதாள குழுக்களுக்கிடையிலான மோதல் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துமளவுக்கு அதிகரிக்க நாங்கள் இடமளிக்கப்போவதில்லை.

இதற்காக நாங்கள் முறையான பல நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றோம், எடுத்து வருகின்றோம் என்றார்.

## “நீதிமன்றத்துடன் தொடர்புடைய சிலரிடம் விசாரணை நடத்தப்படும்”

பாதாளக் குழு மோதல் சம்பவங்களுடன் தொடர்புடைய பொலிஸார், மற்றும் பாதுகாப்புத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அதேபோன்று, நீதிமன்றத்துடன் தொடர்புடைய சிலரிடமும் விசாரணை மேற்கொள்ளவுள்ளோம் என அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (24) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து, பாதாள குழுக்களுக்கிடையிலான மோதல், இதனால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டில் இடம்பெற்றுவரும் இந்த சம்பவங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை, நாட்டு மக்களின் பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு தொடர்பில் உச்சமட்டத்தில் கருத்திற்கொள்வதாகப் பாதுகாப்பு அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

திட்டமிட்ட குழுக்களுக்கிடையில் இடம்பெற்றுவரும் மோதல் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார். அதேபோன்று, பாதுகாப்பு அமைச்சு சார் ஆலோசனை குழுவில் ஜனாதிபதியும் தெளிவுபடுத்தியுள்ளார். இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதால் விசாரணை தொடர்பான தகவல்களை பாராளுமன்றத்துக்குத் தெரிவித்து, விசாரணைகளைக் குழப்ப முடியாது.

இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதாகத் தெரிவித்து பொலிஸார், மற்றும் பாதுகாப்புத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் கூட கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அதேபோன்று, நீதிமன்றத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் சிலரிடம் விசாரணை மேற்கொள்ளவும் உள்ளோம் என்றார்.



## “7 பேர்ச் காணியை கொடுக்க வேண்டும்”

பெருந்தோட்ட மக்களின் வீட்டுத் திட்டத்துக்கு அரசாங்கம் ஒதுக்கியுள்ள பணத்தில், ஆயிரம் வீடுகளைக்கூட அமைக்க முடியாது. அதனால் அரசாங்கம் அந்த மக்களுக்கு வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க நினைத்தால் 7 பேர்ச் காணியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் சுஜித் சன்ஜே பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (22) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், அரச ஊழியர்களுக்கு உணரக்கூடிய வகையில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் என்றே ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் சம்பள அதிகரிப்பு எவ்வளவு என்பதை அரச தரப்பினருக்கே தெளிவில்லாமல் இருக்கிறது. எங்களுக்கும் விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கிறது. ஆனால், எனக்கு விளங்கியதன் பிரகாரம் 5,070 ரூபாய் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கம் தெரிவித்திருக்கும் 15ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொள்ள 2027ஆம் ஆண்டுவரை காத்திருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1,700 ரூபாவாக வழங்கப் பரிந்துரைப்பதாக ஜனாதிபதி வரவு- செலவு திட்டத்தில் தெரிவித்திருந்தார். ஆனால், தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 2 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துப் பெற்றுக் கொடுப்பதாகவே இவர்களின் கொள்கை பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ரணில் விக்ரமசிங்க இரண்டு வருடங்களுக்கு முன்னரே இந்த 1,700 ரூபாவை பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் அவருக்கு அதனைச் செய்ய முடியவில்லை. அவரின் இறுதிக் கால கட்டத்திலேயே கம்பனிகளுடன் கலந்துரையாடி 1,350 ரூபாய் சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தார் என்றார்.

## “புதிய அரசமைப்பை உருவாக்குவோம்”



காலாவதியாகியுள்ள அரசியலமைப்பை இரத்துச் செய்து மக்களின் விருப்பத்துடன், புதிய அரசியலமைப்பை நிச்சயம் உருவாக்குவோம் என வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கம், ஜனநாயகம் ஆகியவற்றை ஸ்திரப்படுத்துவோம். வழங்கிய வாக்குறுதிக்கு அமையப் பயங்கரவாத தடைச்சட்டத்தை வெகு விரைவில் இரத்துச் செய்வோம் என்றார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (22) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான 5ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையடைந்த அரசாங்கத்தையே பொறுப்பேற்றோம். பொருளாதார மீட்சிக்குச் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அடையாளப்படுத்தப்பட்டுள்ள இலக்கு திட்டங்களை அமுல்படுத்தியுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்துக்கமையவாக எதிர்வரும் 28ஆம் திகதி 3ஆவது மீளாய்வு கூட்டம் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து நான்காவது தவணைத் தொகையாக 335 மில்லியன் டொலர் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார மறுசீரமைப்புக்கான திட்டங்களைச் செயற்படுத்தி வெளிநாட்டுக் கையிருப்பை 6.1 பில்லியன் டொலராக ஸ்திரப்படுத்தியுள்ளோம். 2025ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்த தேசிய உற்பத்தியை 15 சதவீதமாக அதிகரித்துக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

எதிர்க்கட்சிகள் கலக்கமடைந்துள்ளதை கண்டு அரசாங்கம் கலக்கமடைய போவதில்லை. மக்களுக்க வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றுவோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களும், பெருந்தோட்ட மக்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்கள்.

ஆகவே மக்களின் ஆணைக்கமைய செயற்படுவோம் என்றார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம் காலாவாதியடைந்துள்ள இந்த அரசியலமைப்பை இரத்துச் செய்து மக்களின் விருப்பத்துடன், பொதுஜன வாக்கெடுப்புடன் புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

## “யு.எஸ்.எய்ட் நிறுவனம் அறிவிக்கவில்லை”

இலங்கைக்கு வழங்கும் நிதியுதவிகளை இடைநிறுத்துவதாக அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனம் உத்தியோகப்பூர்வமாக இலங்கைக்கு இதுவரையில் அறிவிக்கவில்லை என பிரதி நிதி அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (24) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் எதிர்க்கட்சி எம்.பி. ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியின் கட்டளைக்கமைய யு.எஸ்.எய்ட் நிறுவனம் வெளிநாடுகளுக்கு வழங்கும் நிதியுதவி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நிதியுதவி வழங்கலை இடைநிறுத்தல் அல்லது முழுமையாக இரத்து செய்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் போது அது தொடர்பான தீர்மானத்தை இலங்கைக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கும் நிதியுதவியை இடைநிறுத்துவதாக அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனம் இதுவரையில் இலங்கைக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கவில்லை. ஆகவே உத்தியோகப்பூர்வமான தீர்மானம் அறிவிக்கப்படாத நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவிக்க முடியாது என்றார்.



இஸ்ரேல்

போர் நிறுத்த பேச்சுவார்த்தையை

# இரத்து செய்த ஹமாஸ்

## மீண்டும் போர் தொடங்கும் அச்சம்



இஸ்ரேலுடனான போர் நிறுத்த பேச்சுவார்த்தையை ஹமாஸ் ஆயுதக்குழு இரத்து செய்துள்ளது.

இஸ்ரேல், ஹமாஸ் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமலில் உள்ளது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தப்படி ஹமாஸ் தங்கள் பிடியில் உள்ள இஸ்ரேலிய பணய கைதிகளை விடுதலை செய்து வருகிறது. அதற்கு ஈடாக இஸ்ரேல் தங்கள் நாட்டுச் சிறைகளில் உள்ள பாலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்து வருகிறது.

இஸ்ரேலியர்களின் சடலங்களை அவமதிக்கும் வகையில் காசாவில் அணிவகுப்பு நடத்தி ஹமாஸ் ஒப்படைத்ததாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது. இது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் இஸ்ரேல் தெரிவித்தது.

இதையடுத்து, சனிக்கிழமை (22) பணய கைதிகளில் மேலும் 6 பேரை ஹமாஸ் விடுதலை செய்தது. இந்த நடவடிக்கையின்போதும் காசாவில் மேடை அமைக்கப்பட்டு அணிவகுப்பு நடத்தப்பட்டு பணய கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின்போது மேலும் 2 பணய கைதிகளை ஹமாஸ் ஆயுதக்குழு காரில் அழைத்து வந்துள்ளது. அந்த பணய கைதிகள் தங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கெஞ்சுவது போன்ற வீடியோவையும் ஹமாஸ் ஆயுதக்குழு வெளியிட்டது.

இந்த நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த இஸ்ரேல், போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டியது.

மேலும், 6 பணய கைதிகளுக்கு ஈடாக இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பாலஸ்தீனியர்களில் 620 பேரை விடுதலை செய்ய மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தையும் தற்காலிகமாக நிறுத்தியது. பாலஸ்தீனிய கைதிகள் 620 பேரையும் இஸ்ரேல் விடுதலை செய்யவில்லை.

இந்நிலையில், பாலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்யாத நிலையில், இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக ஹமாஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.


பாலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்யாதவரை இஸ்ரேலுடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதில்லை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன், போர் நிறுத்த பேச்சுவார்த்தையை ஹமாஸ் இரத்து செய்துள்ள நிலையில் பாதுகாப்புப்படையினர் தயார் நிலையில் இருக்குமாறு, இஸ்ரேல் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இதன் மூலம் காசா முனையில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது இஸ்ரேல் மீண்டும் போரை தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான்

## 'ரேடியோ பேகம்' வானொலிக்கு மீண்டும் அனுமதி



ஆப்கானிஸ்தானில், பெண்கள் வானொலிக்கு விதிக்கப்பட்டு இருந்த தடையை தலீபான்கள் அகற்றியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில், 2021ஆம் ஆண்டு, தலீபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். அதன்பிறகு அங்குப் பெண்கள், சிறுமிகள் மீது ஏராளமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து ரேடியோ பேகம் என்ற பெண்கள் வானொலி நிலையத்துக்கும் அங்குத் தடை விதிக்கப்பட்டது. இது முழுக்க முழுக்க ஆப்கானிய பெண்களால் இயங்கும் ஒரு வானொலி ஆகும். இதன்மூலம் அந்த நாட்டின் பாடசாலைக் கல்வி பாடத்திட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன.

அந்த வானொலியை மீண்டும் இயக்க அனுமதிக்க கோரி தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டது. இதனையடுத்து, பெண்கள் வானொலிக்கு விதிக்கப்பட்டு இருந்த தடையை தலீபான்கள் அகற்றியுள்ளனர்.

இது தொடர்பாக தலீபான் அரசின் செய்தி மற்றும் கலாசார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ரேடியோ பேகம்' வானொலி மீண்டும் இயக்கப்பட வேண்டும் என தொடர்ந்து அவர்கள் கேட்டுக்கொண்டதனால், அதன் மீதான தடை விலக்கப்பட்டு இயக்கப்பட அனுமதிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியா

## விபத்தில் 14 பேர் பலி

நைஜீரியா - நைஜர் மாகாண நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில், 14 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

30க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று, குசோபோகி என்ற பகுதி அருகே சென்றபோது முன்னால் சென்ற வாகனத்தை முந்த முயன்றது. அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் முன்னால் சென்று கொண்டிருந்த டேங்கர் லொறி மீது மோதியது. இதில் அந்த பஸ் தீப்பிடித்து எரிந்தது.

இந்த விபத்தில் 14 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்த 6 பேர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். சில மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீயை அணைத்தனர்.



உத்தரப்பிரதேசம்

## 140 வலைத்தளங்கள் மீது வழக்குப் பதிவு

உத்தரப் பிரதேசம், அகலாமாபாத் தில் நடைபெற்ற மகா கும்பமேளாநிகழ்வு குறித்து இணையத்தில் தவறான தகவல்களைப் பரப்பியதாக 140 சமூக வலைத்தள பக்கங்கள் மீது உத்தரப் பிரதேச பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு மகா கும்பமேளா திரிவேணி சங்கமத்தில் புனித நீராடும் பெண்களை ஆபாசமான முறையில் சித்தரித்து சில சமூக வலைத்தள பக்கங்கள் காணொளிகளை வெளியிட்டன. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதனையடுத்து சமூக வலைத்தளங்களை உத்தரப் பிரதேச சைபர் க்ரைம் பொலிஸார் தொடர்ந்து கவனமாகக் கண்காணித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், மகா கும்பமேளா தொடர்பாகத் தவறான தகவல்களைப் பரப்பியதாக 140 சமூக வலைத்தள பக்கங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மகா கும்பமேளா டிஐஜி வைபவ் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

மேலும் வரும் 26ஆம் தேதியுடன் மகா கும்பமேளா நிறைவடைவதை முன்னிட்டு அன்றைய தினம் ஏராளமான பக்தர்கள் வரக்கூடும் என்பதால் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், எவ்வளவு கூட்டம் வந்தாலும் அதைச் சமாளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மகா கும்பமேளாவுக்கு இதுவரை 62 கோடி பக்தர்கள் வந்துள்ளனர் என்று உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

"உலகில் எந்த நிகழ்வுக்கும், இந்த அளவுக்கு மக்கள் வந்திருக்கமாட்டார்கள் என நினைக்கிறேன். இந்த நூற்றாண்டின் அரிய நிகழ்வுகளில் மகா கும்பமேளாவும் ஒன்று. இது மக்களை தங்களின் ஆன்மிக மற்றும் கலாச்சார பாரம்பரியத்துடன் மீண்டும் இணைவதற்கான தொடர்பை ஏற்படுத்தும்." என்றும் யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.



ராஜஸ்தான்

ஆழ்துளை கிணற்றில் விழுந்த

## 5 வயது சிறுவன் பலி

ராஜஸ்தான் மாநிலம், ஜலாவர் மாவட்டத்தில் ,ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த 5 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

அப்பகுதியில், குறித்த சிறுவனின் தந்தைக்குச் சொந்தமான விவசாய நிலமொன்றில் கடந்த சில நாட்களுக்கு முன் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. அதில் தண்ணீர் வராததால் கிணற்றை மூடாமல் அப்படியே விட்டுள்ளனர்.

குறித்த சிறுவன், ஞாயிற்றுக்கிழமை(23) ஆழ்துளைக் கிணறு அருகே விளையாடிக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக ஆழ்துளைக் கிணற்றில் விழுந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்துத் தகவலறிந்த தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்னடுள்ளர். ஆழ்துளைக் கிணற்றில் 32 அடி ஆழத்தில் சிறுவன் சிக்கிய நிலையில், மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்றது. இந்நிலையில், 16 மணிநேரம் தீவிர மீட்புப்பணிக்கு பின், திங்கட்கிழமை(24) அதிகாலை 4 மணியளவில் சிறுவன் மீட்கப்பட்டுள்ளார். சிறுவனை உடனடியாக மருத்துவக் குழுவினர் பரிசோதனை செய்த போது, சிறுவன் ஏற்கெனவே உயிரிழந்து விட்டார் என கூறியுள்ளனர்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சிற்றியை தோற்கடித்த லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(23) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா, டொமினிக் ஸபொஸ்லாய் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 64 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 47 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்ட் காணப்படுகின்றது. சிற்றியும், நியூகாசில் யுனைட்டெட்டும் தலா 44 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் மூன்றாம், நான்காமிடங்களில் சிற்றி, நியூகாசில் காணப்படுகின்றன.









தெற்காசிய தடகளச் சம்மேளன நாட்டுக்கு குறுக்கேயான சம்பியன்ஷிப்:

## முதலிடம் பெற்ற வக்ஷன் விக்னராஜ்

பாகிஸ்தானின் இஸ்லாமபாத்தில் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற தெற்காசிய சம்மேளன தடகளச் சம்மேளன நாட்டுக்கு குறுக்கேயான சம்பியன்ஷிப்பின் சிரேஷ்ட பிரிவில் இலங்கையின் வக்ஷன் விக்னராஜ் முதலிடம் பெற்றுள்ளார்.

போட்டித் தூரத்தை 31 நிமிடங்கள் 56 செக்கன்கள் 38 மில்லி செக்கன்களில் கடந்தே தலவாக்கலை மிடில்டன் தோட்டத்தைச் சேர்ந்த விக்கின்ராஜ் முதலிடத்தைப் பெற்றிருந்தார்.

கனிஷ்ட பிரிவில் இலங்கையணி இரண்டாமிடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளி விழாக் காணும் நியூ ஸ்டார்

வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகமானது 1999ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டு வெள்ளி விழா காண்கின்றது.

தங்களது 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் பேரணியொன்று கழகத் தலைவர் ஸட்.எம்.றிஹாஸ் இஸ்மாயில் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்பேரணி வாழைச்சேனை பொது மைதானத்துலிருந்து ஆரம்பமாகி இந்த வாகன பேரணி ஓட்டமாவடி சுற்றுவட்ட சந்தியினூடாக மீண்டும் வாழைச்சேனை பொது மைதானத்தை வந்தடைந்தது. இதன்போது, கழக உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் என நூற்றுக்கும் அதிகமானோர் உற்சாகமாகக் கலந்து கொண்டனர்.

மேலும், இந்த வெள்ளி விழா நிகழ்வை முன்னிட்டு கழக அங்கத்தவர்களை 4 அணிகளாக வகைப்படுத்தி கிரிக்கெட், கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டப் போட்டிகள் நாடாத்தப்பட்டவுள்ளதோடு புதன்கிழமை (26) விசேட கௌரவிப்பு நிகழ்வும் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்போது பிரதேசத்தில் விளையாட்டில் பிரகாசித்த வீரர்கள் மற்றும் நியூ ஸ்டார் விளையாட்டு கழகத்தின் வீரர்களையும் கௌரவிக்கப்படவுள்ளதுடன் இரவு நேர விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





இரண்டாவது போட்டியில்

## அயர்லாந்தை வென்ற சிம்பாப்வே

அயர்லாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஹராரேயில் ஞாயிற்றுக்கிழமை(23) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சிம்பாப்வே வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

அயர்லாந்து: 137/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: லொர்கன் டக்கர் 46 (40), ஹறி டெக்டர் 28 (20), கேர்ட்டிஸ் கம்பர் 26 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்ரெவர் குவான்டு 3/24 [4], சிகண்டர் ராசா 2/22 [4], பிளஸிங்க் முஸர்பனி 1/21 [4], வெலிங்டன் மஸகட்ஸா 0/29 [4])

சிம்பாப்வே: 141/7 (19.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: டொனி முன்யொங்கா ஆ.இ 43 (30), றயான் பேர்ள் 27 (20), சிகண்டர் ராசா

## சம்பியன்ஸ் கிண்ணம்: பாகிஸ்தானை வீழ்த்திய இந்தியா



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் ஞாயிற்றுக்கிழமை(23) நடைபெற்ற பாகிஸ்தானுடனான குழு ஏ போட்டியில் இந்தியா வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், சௌட் ஷகீலின் 62 (76), அணித்தலைவர் மொஹமட் றிஸ்வானின் 46 (77), குஷ்டில் ஷாவின் 38 (39) ஓட்டங்களோடு 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 3, ஹர்திக் பாண்டியா 2, ஹர்ஷித் ரானா, அக்ஸர் பட்டேல், இரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 242 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, விராட் கோலியின் ஆட்டமிழக்காத 100 (111), ஷ்ரேயாஸ் ஐயரின் 56 (67), ஷுப்மன் கில்லின் 46 (52) ஓட்டங்களோடு 42.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக கோலி தெரிவானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை 25, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.